**கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செயற்திட்டம் - 2013**

கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடீபீ) இலங்கை துறைமுகங்கள் அதிகார சபைக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2007 ஏப்ரல் 25 ஆம் திகதிய 2319 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (ஏ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன.**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராக உள்ளதுடன் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை அமுலாக்கல் முகவராக உள்ளது. போட்டித்தன்மையை முன்னேற்றுவதனூடாக, அல்லது பிராந்திய கப்பல் போக்குவரத்து மைய துறைமுகம் அதன் அந்தஸ்தைப் பேணுவதற்காக பொது மற்றும் தனியார் பங்குடமையாக அதனைப் பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதே கொழும்பு துறைமுக விரிவாக்கற் செயற்திட்டத்தின் குறிக்ககோள்களாகும். செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 46,715.68 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 424.8 மில்லியனாக உள்ளதுடன் அதில் ஆசிய அபிவிருத்தி வங்கி ரூபா 32,991.3 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 300 மில்லியன் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும் இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது முறையே ரூபா 5,465.56 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 49.7 மில்லியனும் ரூபா 8,258.82 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75.1 மில்லியனும் நிதியளிப்பதற்கு உடன்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2008 ஏப்ரல் 11 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2012 ஏப்ரல் அளவில் பூர்த்தி செய்யப்படவேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும் ஆசிய அபிவிருத்தி வங்கி தனது 2011 மே 03 ஆம் திகதிய கடித மூலம், செயற்திட்டக் காலத்தைக் 2013 ஏப்ரல் 30 வரை நீடித்திருந்தது. செலவினம் செயற்திட்ட ஆக்கக் கூறுகளிற்கிடையில் பின்வருமாறு பங்கிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டக் கூறு | தொகை | |
|---|---|---|
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஆரம்ப வேலைகளின் கிரயம் | 318.5 | 35,025.76 |
| மேற்பார்வை மற்றும் நிருமாணத்தின் கிரயம் | 12.7 | 1,396.63 |
| வரிகள் மற்றும் கட்டணங்கள் | 49.7 | 5,465.56 |
| நிகழத்தக்கவை | 43.9 | 4,827.73 |
| | 424.8 | 46,715.68 |

குறிப்பு :- 2007 ஏப்ரல் 25 இல் உள்ளவாறான நாணய பரிமாற்ற வீதம் ஐ.அ.டொலர் 1 = ரூபா 109.9710

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கேல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும், வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலிவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட அறவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(எ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

**3. அபிப்பிராயம்**

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள், அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது (எஸ்ஓஈஎஸ்) அவை கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களிற்கு ஆதாரமானவைகளாவென நியாய பூர்வமாக நம்பிக்கை கொள்ளமுடியுமென்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் சொல்லப்பட்ட நிதிக் கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**4. நிதிக்கூற்றுக்கள்**

**4.1 நிதிசார் செயலாற்றல்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 1,980 மில்லியனாக இருந்ததுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 44,035 மில்லியனாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

| | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| வேலைகள் | 1,772 | 7,690 | 40,057 |
| ஆலோசனை சேவைகள் | 38 | 185 | 1,031 |
| வரிகள், சுங்கத்தீர்வைகள் | 9 | 214 | 1,618 |
| நிதிக் கட்டணங்கள் மற்றும் செயற்திட்ட நிருவாகம் | 161 | 352 | 1,329 |
| | 1,980 | 8,441 | 44,035 |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 5.1 இணக்கஞ் செய்யப்படாத மீதிகள்

வரிசை அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம், வரி மற்றும் சுங்கக் கட்டணமாக மீளாய்வாண்டில் ரூபா 46,606,303 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருந்த அதேநேரம் செயற்திட்டக் கணக்கின் பிரகாரம், அது ரூபா 8,306,093 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 6. நிதியத்தின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு மற்றும் மீளாய்வாண்டின் போதான நிதிகளின் பயன்பாடு மற்றும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான திரண்ட பயன்பாடு தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்களில் சில காண்பிக்கப்படுகின்றன.

| மூலம் | வழங்கப்பட வேண்டுமென இணங்கப்பட்ட தொகை | | ஆண்டின் போது பயன்படுத்தப்பட்ட நிதிகள் | 2013 திசெம்பர் 31 ஆந் திகதிவரை பயன்படுத்தப்பட்ட நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | யூ.எஸ். டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஏடீபீ | 300.0 | 32,991.3 | 1,810 | 3,000 | 33,748 |
| ஜீஓஎஸ்எல் | 49.7 | 5,465.5 | 9 | 12.7 | 1,618 |
| எஸ்எல்பீஏ | 75.1 | 8,258.8 | 161 | 68.2 | 8,669 |
| | 424.8 | 46,715.6 | 1,930 | 380.9 | 44,035 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆலோசனை நிறுவனத்துடன் செயற்திட்டத்தால் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின் இணைப்பு ஈ இன் படி, உள்நாட்டு சம்பளங்கள் ரூபா 268,072,500 தொகையானதுடன் ஆலோசனை நிறுவனத்தின் வெளிநாட்டுப் பதவியணியினரின் 164 மாதங்களிற்கான வதிவிடச் செலவுகள் ரூபா 45,100,000 தொகை செயற்திட்டத்தால் செய்யப்பட வேண்டுமென உடன்பட்டது. எவ்வாறாயினும், 2012 திசெம்பர் வரையான உள்நாட்டு சம்பளங்கள் மற்றும் ஆலோசனையாளர்கள்களின் வதிவிடச் செலவுகளின் உண்மையான செலவினம் முறையே ரூபா 321,591,619 மற்றும் ரூபா 48,867,204 தொகையாக இருந்ததுடன் அதன்படி, மொத்த செலவினம் ரூபா 55,776,447 தொகையால் விஞ்சியிருந்தது.

(ஆ) செயற்திட்டத்தின் ஆரம்பத்திலிருந்து செயற்திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்களிலிருந்து ஏற்பட்ட நாணய மாற்று நட்டம் ரூபா 2,616 மில்லியன் தொகையாகும்.

(இ) கொழும்புத் துறைமுக விரிவாக்கல் செயற்திட்டம் 2010 ஒக்தோபர் 31 ஆந் திகதி பூர்த்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தின் காலப்பகுதி 2013 ஏப்ரல் 30 வரை இரு தடவைகள் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் பயன்படுத்தப்படாத நிதிகளிலிருந்து 1.2 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 110,781,114 தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிருவாகம்
(இ) ஒப்பந்தக்காரர்களினதும் ஆலோசனையாளர்களினதும் சுங்கத் தீர்வைகள் மற்றும் உழைக்கும் போதே செலுத்தப்படும் வரியின் மீளளிப்பு